தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 27.06.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அலங்கார தோட்டக்கலை குறித்த சர்வதேச கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறையானது தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கீழ் இயங்கும் "SoPHoST" என்கிற தோட்டக்கலை ஆராய்ச்சியாளர்களின் சங்கத்துடன் இணைந்து "அலங்கார தோட்டக்கலை குறித்த சர்வதேச கருத்தரங்கு" அறிவியலிலிருந்து சமூகத்திற்கு என்ற மையக்கருத்தில் ஜூன் 26 முதல் 28 வரை நடத்தி வருகிறது.

கருத்தரங்கின் துவக்க விழாவானது 26.06.2025 அன்று நடைபெற்றது. அறிஞர்கள், மலர் சாகுபடியாளர்கள், மலர் விற்பனையாளர்கள், நில எழிலூட்டும் வல்லுநர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் நடத்தப்படுவதாகவும் இதன் மூலம் இந்திய மற்றும் உலகளாவிய அளவில் கருத்து பரிமாற்றம் நடைபெறுவதற்கு வழி வகுக்கும் எனவும் கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் மற்றும் மலரியல்; துறை தலைவர் முனைவர் ம.கங்கா, அவர்கள் தனது வரவேற்புரையில் கூறினார்.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் இரா. தமிழ்வேந்தன் அவர்கள் விழாவை துவக்கி வைத்து தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் மற்றும் தோட்டக்கலை கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் வி.பாலசுப்ரமணி அவர்கள் விழா சிறப்புற வாழ்த்தினார்.

முனைவர் கே.வி. பிரசாத், இயக்குனர், மலரியல் ஆராய்ச்சி இயக்ககம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இவ்விழாவில் முனைவர் தட்ளானி (முன்னாள் இயக்குனர் தோட்டக்கலை மற்றும் மலரியல் வல்லுனர்) அவர்களும் மற்றும் தோட்டக்கலை கல்லூரியின் முன்னாள் முதன்மையர் எம்.ஜவஹர்லால் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

தேசிய மலரியல் ஆலோசனையகத்தின் இயக்குநர் திரு.பாலசிவபிரசாத் அவர்களும், பிரான்சு நாட்டிலிருந்து வந்துள்ள முனைவர். கியூம் அவர்களும் நெதர்லாந்தில் இருந்து வந்துள்ள பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் சரத்குமார் அவர்களும் சிறப்புரை வழங்கினார்கள்.

ஐந்து மைய கருத்துக்களை கொண்டு இக்கருத்தரங்கானது நடைபெறுகிறது. இதில் மரபியல், பயிர் இன அபிவிருத்தி, உயிர் நுட்பவியல் பயிர்ப்பெருக்கம், பயிர் உற்பத்தி, பயிர்ப்பாதுகாப்பு ஆகிய கருத்துக்கள் உள்ளடக்கிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் பற்றி விவாதிக்கப்பட்டன. அறுவடைப்பின்சார் தொழில்நுட்பம், தாவர வேதியியல் மற்றும் மதிப்பு கூட்டலில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆராய்ச்சிகளும் கருத்து பரிமாற்றம் செய்யப்பட உள்ளன. மலரியல் மற்றும் நில எழிலூட்டுதலின் பயனாளர்களை ஒருங்கிணைக்கும் பாலமாக இந்த கருத்தரங்கு அமையும்.

இக்கருத்தரங்கில் 200க்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணாக்கர்கள் சர்வதேச அளவில் கலந்து கொண்டுள்ளனர். துவக்க விழாவின் முடிவில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மலரியல் துறை தலைவர் முனைவர் இரா.இராஜதுரை அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**